

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் "முதல்வர் மருந்தகத்தை" திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கடலூர் மேற்கு மாவட்டம் மங்கலம்பேட்டை பேரூராட்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் முதல்வர் மருந்தகத்தை தொடங்கி வைத்து பொது மக்களுக்கு மருந்துகள் விற்பனை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர். இராதாகிருஷ்ணன் மாவட்ட வருவாய் ஆய்வாளர் மாவட்ட மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அதிகாரிகள். தலைமைச் செயற்குழு உறுப்பினர் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி, விருத்தாசலம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் தி.வேல்முருகன், மங்கலம்பேட்டை பேரூர் கழக செயலாளர் செல்வம், மங்கலம்பேட்டை பேரூராட்சி தலைவர் திருமதி சம்சுதீன் பேகம் இப்ராஹிம் மற்றும் அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.அறிக்கை!

செஞ்சி , பிப். 27 -

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட தலைவன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் கழகத்தில் கழக அடிப்படை உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், இளைஞரணி செயலாளர்,கழக செயல் தலைவர் கழகத் தலைவர் என்றும்,பொது வாழ்வில் சென்னை மாநகர மேயர், சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், முதலமைச்சர், என்று உழைப்பால் உயர்ந்து முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு, என்று பாராட்டு பெற்ற நமது கழகத் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா வரும் மார்ச் 1ஆம் தேதி அன்று கழகத்தினரால் எழுச்சியுடன் கொண்டாடப்பட உள்ளது.

திராவிட மாடலாட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர்திராவிட தலைவன் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி கிளைகள் நகராட்சி வார்டுகள் பேரூராட்சி வார்டுகள் தோறும் மார்ச் 1ஆம் தேதி அன்றும் மற்றும் மார்ச் மாதம் முழுவதும் கழக கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு பேனா புத்தகங்கள் வழங்கி ஏழை எளிய மக்களுக்கு வேட்டி சேலைகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மரக்கன்றுகளை வழங்கியும், மரக்கன்றுகள் நட்டுவைத்தும் ஆதரவற்றோர், முதியோர், இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு மற்றும் உடைகள் வழங்கியும், கழகத் தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சீரும் சிறப்புமாக கொண்டாட வேண்டும்.

மேலும் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கழகம் சார்பில் முதலமைச்சரின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் தலா 72 நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளும், ஒன்றியம் கிளை கழகம் சார்பில் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் முதலமைச்சரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேலும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் ஊராட்சி கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் அனைவரும்கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டுமென விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட மாணவர் அணி சார்பாக இரண்டு நாட்கள் பகல், இரவாக நடைபெற்ற திராவிட கோப்பை கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ரொக்கப்பணம் மற்றும் பரிசு கோப்பை வழங்கினார். உடன் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், முன்னாள் துணை மேயர் மிசா எம்.பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம். ஜெயராம், மாவட்ட கழக நிர்வாகிகள் ஒச்சுபாலு, மூவேந்திரன், சின்னம்மாள், கழக நிர்வாகிகள் அக்ரி கணேசன், வைகை பரமன், பி.டி. மணிமாறன், முத்து கணேசன், செய்யது அபுதாஹிர், சுபா கண்ணன், பி.கே.செந்தில், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் சௌந்தரராஜன், மண்டல தலைவர்கள் பாண்டிச்செல்வி, சரவணபுவனேஸ்வரி, மாணவரணி துணை அமைப்பாளர்கள் திருப்பதி, மதன்மோகன், அரிசங்கர், நித்யதர்ஷினி, சந்துரு, வட்டச் செயலாளர்கள் தஞ்சை மதி, யோகராஜ், முகமது ரபிக், நாகையா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், விளையாட்டு வீரர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்



இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயல்வீரர் கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா அஹமது தம்பி தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் துணை செயலர் கருப்பையா அனைவரையும் வரவேற்றார். மாவட்ட தி.மு.க. செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் சம்பத் ராஜா, சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கொடி சந்திரசேகர் (பரமக்குடி), அருண் (திருவாடானை), சுதர்சன் (இராமநாதபுரம்), மகளிரணி துணைத்தலைவர் பவானி, ராஜேந்திரன், தேர்தல் பணி பிரிவு செயலாளர் சுந்தர்ராஜ்,மற்றும் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ரவிச்சந்திர ராமவன்னி, மற்றும் மாணவரணி மாவட்ட அமைப்பாளர் சுரேஷ் உள்பட மாநில மாவட்ட நகர ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அப்பா அப்பா பல்லாண்டு வாழ்க!



**தே**திகள் கூடி ஒரு தேதிக்கு இனிப்
பூட்டிய மார்ச் 1 தேதி !

பண்பாட்டுத் தலைவர்
மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சேதி !

ஒருமுறை அப்பா என்று
அழைக்கட்டுமா தலைவரே என்றாய்
கலைஞரின் புதல்வா !

நாடே உன்னை அப்பா அப்பா
என்று அழைக்கிறது எங்கள் முதல்வா !

இனம் உயர்கிறது தமிழ் நிலத்தில்
உன் கால்களில் தழும்பு !

கலைஞரின் எதிரிக்கு நீ அவாய்
எரிமலைக் குழம்பு !

அண்ணா வழியில் மதம் மறுக்கும்
பகை அறுக்கும் தலைமை – நீ !

உறங்காத போர்வாள்களை
உருவாக்கும்
தீ உலைக்குழி – நீ !

வி.பி.சிங்குக்கு சிலை எடுத்த சமூக
நீதி – நீ !

நிலவுக்கு வயது கூடுகிறது ஆனால்
இளம் பிறை – நீ !

டெல்லி சுருட்டி வைக்க முடியாத
சூறாவளி – நீ !

அலையும் அலைவரிசையும்
ஆராத்தி எடுக்கும் வலைதளம் – நீ !

மிசா அடக்கு முறையில் நிமிர்ந்தாய்
குருதி சிந்தி !

மு.க.ஸ்டாலின்
மும்மொழியை
எதிர்க்கிறார்
டெல்லியே சிந்தி !

இந்தி எதிர்ப்பு போர் எனில் எழுவார்
தண்ணீரில் கால்களை உந்தி !

கொடி பிடிக்கும் தமிழ் வெறியருக்கு
தலைமையேற்று நிற்பார் முந்தி !

மான்களை காப்பது சிங்கத்தின்
பசியைப் போக்குவது
நிர்வாக நெறி !

எத்தனையோ மருத்துவ உதவி
மனித நேயம்
உன் மனதில் ஒளி !

எல்லோருக்கும் எல்லாம்
உன் ஆட்சியின் முகம் !

பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும் நீ
துறை முகம் !

கட்டணமில்லா மகளிர் பேருந்து
பயணத்திட்டம் திட்டமல்ல
திராட்சை வனம் !

மகளிர் உரிமைத் தொகை
தாய் மனம் வாழ்த்துகிறது தினம் !

மழைத்துளியை எண்ணுவதும்
உன் சாதனையை சொல்வதும்
ஒன்றுதான் !

கலைஞர் நினைவிடத்தை இரசிக்கிறது
நிலா நின்று தான் !

அலை நுரைகள் உடையும் ஒலி
பூக்கள் விரியும் ஒலி உன்
புன்னகை !

மினுமினுக்கும்
உன் அழகுக்கு ஈடாகுமா
பொன் நகை !

ஆயுதம் மறு என்றாய்
அறிவுத்தொடு என்றாய் – நீ !

நரிகள் தந்திரம் நொறுக்கும்
கலைஞர் மந்திரம் – நீ !

வில்லை உடைப்பதல்ல வில்லை
தொடுப்பது தமிழன் வீரம் என்றாய் – நீ !

திருக்குவளையில் எழுந்து
காஞ்சிபுரம் வழியாக வரும்
ஈரோட்டுப் பாதை – நீ !

அதிகாரத்தை
மிரட்டிய தியாகத்தின் காதை – நீ !

கடல் தாண்டி நாரைகள்
சொல்லுகிறது திராவிட மாடல்
ஆட்சி காவியத்தை !

பறவைகள் உதிர்க்கும் சிறகில்
ஆகாயம் வரைகிறது உன்
ஓவியத்தை !

கபடி விளையாட்டில் தாய்நாட்டு
எல்லை கோடு – நீ !

சாமானிய மக்களின் சக தோழர் – நீ !

சாலையோர
தேநீர் கடையில் சுவைஞர் – நீ !

புயலை எடுத்தாடும் காற்று
உன் பெயர் எழுதும் போரில் !

மயில் விரித்தாடும் தோகை
உன் வெற்றியை எழுதும் ஊரில் !

மதுரை கலைஞர் நூலகம்
ஜல்லிக்கட்டு மைதானம் பேசும்
உன் பெயரை
பாரில் !

அனைத்து சாதியினரும் அர்ச்சகர்
ஆக்கினாய்
பெரியார் வருகிறார் வெற்றி
தேரில் !

ஆடுகளும் சிறைபடும் புலிகளும்
சிறைப்படும் உன் ஆடு புலி
ஆட்டத்தில் !

தொடர்ந்து தோல்விகள் தான்
எதிரிகளுக்கு
உன் அரசியல் ஓட்டத்தில் !

மாணவர்களுக்கு கல்வி உதவி
வேங்கை கூட்டம் இயக்கம்
கருணை – நீ !

மாணவிகளுக்கு கல்வி உதவி
இளம் பெண்கள் வணங்கும்
அருணை – நீ !

பள்ளியில் காலை சிற்றுண்டி தரும்
உன்னை குழந்தைகள் அன்போடு
அழைக்கும் அப்பா – நீ !

பல்லாண்டு நலத்துடன் வாழ்க
அண்ணனாக
பிறந்த அப்பா – நீ !

**கவிஞர்**
**ஈரோடு இறைவன்**
*கழக இலக்கிய அணி இணைச் செயலாளர்*

